இனிமையான குழந்தைகளே! பாபா மனிதனிலிருந்து தேவதையாக மாற்ற வந்திருக்கிறார் என்றால் அவருக்கு மனதார நன்றி சொல்லி ஸ்ரீமத் படி நடந்துக் கொண்டே இருங்கள்.

கேள்வி: எந்த குழந்தைகளுக்கு பாபாவிடம் அன்பு இருக்கிறதோ, அவர்களின் அடையாளங்கள் என்ன?

பதில்: பாபாவிடம் உண்மையான அன்பிருந்தால் அவரை மட்டுமே நினைப்பார்கள். அவருடைய வழிப்படி மட்டுமே நடப்பார்கள். எண்ணம், சொல், செயலில் யாருக்கும் துக்கம் கொடுக்க மாட்டார்கள். யார் மீதும் வெறுப்பு காண்பிக்க மாட்டார்கள். தன்னுடைய உண்மையிலும் உண்மையான கணக்கை காண்பிப்பார்கள். கெட்ட சங்கத்திலிருந்து தன்னை பாதுகாப்பாக வைப்பார்கள்.

பாடல்: பொறுமையாக இரு மனமே.....

ஓம் சாந்தி. பிராமணர்கள் நிச்சயமாக பொறுமையாகத் தான் இருப்பார்கள். ஏனென்றால், பிராமணர்களுக்குத் தான் பரம்பிதா பரமாத்மாவுடன் வரிசைக்கிரமத்தில் அன்பு இருக்கிறது. அனைவரின் அன்பும் ஒன்று போல கிடையாது. பாபா, மம்மா மற்றும் குழந்தைகள் அவரவர் அனுபவத்தைச் சொல்கிறார்கள். நான்(அஹம்) ஆத்மா என தனக்காக கூறுகிறார்கள். பாபாவோ நான் (அஹம்) பரமாத்மா எனக் கூறுவார். நான் ஆத்மா பரம்பிதா பரமாத்மாவை மிகவும் நினைக்கிறேன். ஏனென்றால், அரை கல்பமாக நாம் இராவண இராஜ்யத்தில் மிகவும் துக்கத்தை பார்த்திருக்கிறோம் என கூறுகிறது. ஆரம்பத்திலிருந்து துக்கம் ஏற்படுவதில்லை. இராவண இராஜ்யத்தில் மெல்ல மெல்ல துக்கம் அதிகரிக்கிறது. கலைகள் குறைந்துக் கொண்டே போகிறது. ஆத்மாவிற்கு இப்போது பரம்பிதா பரமாத்மா சொல்கின்றார் முதலில் நீங்கள் தூய்மையான பக்தியிலிருந்தீர்கள், என்னை மட்டும் நினைத்தீர் கள் பிறகு தூய்மையற்ற ரஜோ குண பக்தியில் வந்து விட்டீர்கள். இப்போது தமோகுண பக்தியாகி விட்டது. யார் வந்தார்களோ அவர்களை பூஜித்துக் கொண்டே இருக்கிறார்கள். பூத பூஜை என கூறப்படுகிறது. ஏனென்றால் உடல் 5 தத்துவங்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இவர் இந்த சாமி என்கிறார்கள். வெறும் 5 தத்துவங்களினால் ஆன உடலை மட்டும் பார்த்து கூறுகிறார்கள். அவர்களின் சரணங்களில் விழுகிறார்கள். இது தமோபிரதான பக்தியாகும். இப்போது பரம்பிதா பரமாத்மா மீண்டும் நமக்கு ஆஸ்தி கொடுப்பதற்காக வந்திருக்கின்றார் என ஆத்மா அறிகின்றது. ஆகையால் எவ்வளவு முடியுமோ அவரை நினைக்கின்றார்கள். நிரந்தரமாக என்னை நினையுங்கள் என்பது அவருடைய கட்டளையாகும். ஆத்ம உணர்வுடையவர் ஆகுக அல்லது ஆத்ம அபிமானி ஆகுக. அடிக்கடி பாபாவிற்கு நன்றி கூறுகிறேன் என பாபா கூறுகின்றார். பாபா நீங்கள் என்னை இருளிலிருந்து வெளியே எடுத்து விட்டீர்கள். பாபாவுடன் நம்முடைய அன்பு இருக்கிறது. மற்றவர்களுக்கு வினாசக் காலத்தில் விபரீதமான புத்தியாகும். அவர்கள் முழு ஆஸ்தியும் அடைய முடியாது. லௌகீக குழந்தைகளுக்கு அந்த தந்தையிடம் அன்பு இருக்கிறது. அப்பாவின் வழிப்படி நடக்கும் போது அப்பாவும் திருப்தி அடைகிறார். ஒரு வேளை குழந்தை சொற்படி நடக்கவில்லை என்றால் அப்பா திருப்தியாக மாட்டார். யார் சொல்படி நடக்க வில்லையோ, அவர்கள் கெட்ட

பிள்ளைகள் ஆவார்கள். எனவே என்னை நினைத்தால் உங்களுடைய விகர்மங்கள் எரிந்துக் கொண்டே போகும் என எல்லையற்ற தந்தை கூறு கின்றார். என்னுடையவர் ஆகிவிட்டீர்கள் என்றால், எந்த ஒரு பாவ செயலும் இந்த கர்மேந்திரி யங்களால் செய்யக் கூடாது. ஒரு போதும் ஸ்ரீமத்தை மீறக் கூடாது. பாபா உங்களை பூஜாரி யிலிருந்து பூஜைக்குரியவராக மாற்றுகிறார் என்றால் பாபாவிற்கு எவ்வளவு நன்றி சொல்ல வேண்டும். அவருடைய வழிப்படி நடக்கவில்லை என்றால் பிறவி பிறவிக்கும் பதவி குறைந்து போகும். நாம் இங்கே அழுக்கானவைகளுக்கு கீழானவை என கூறுகின்றோம். ஆனால் அங்கே குறைந்த பதவி கீழான பதவி என்று கூறுகிறார்கள். நன்கு அனுபவியுங்கள் என்று பாபா கூறுகின்றார். எப்படி மனைவி கணவனை நினைக்கிறாரோ அப்படி என்னை நீங்கள் நினையுங்கள். என்னுடைய ஸ்ரீமத் படி நடங்கள். எண்ணம், சொல், செயலில் யாருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது. மனதில் யார் மீதும் வெறுப்பு வைக்கக் கூடாது. ஒவ்வொரு ஆத்மாவும் அதனதன் நடிப்பை நடிக்கிறது.

இப்போதைய இந்த பிறவி எதிர் கால பிறவியை விட உயர்ந்தது என நீங்கள் அறிகிறீர்கள். இங்கே நாம் ஈஸ்வரிய வாரிசாகி இருக்கிறோம். சத்யுகத்தில் தெய்வீக வாரிசாக இருப்போம். இவ்விடத்தின் மகிமை அதிகமாகும். ஜகத்தம்பாவிடமிருந்து 21 பிறவிகளுக்கு ஆஸ்தி கிடைக் கிறது. லஷ்மியிடமிருந்து என்ன ஆஸ்தி கிடைக்கிறது. இந்த வி^யங்களை புதியவர்கள் யாரும் புரிந்துக் கொள்ள முடியாது. பலர் வருகிறார்கள். ஆனால் யாருக்கு நிச்சயம் இல்லையோ அவர்கள் நிலைத்திருக்க முடியாது. அப்பா, அம்மா குழந்தைகளின் நண்பர்கள் உறவினர்கள் பலர் வருகிறார்கள். மேலும் ஆபிஸர்கள் போன்றோர் வருகிறார்கள் என்றால் அனுமதி அளிக்கப்படுகிறது. எங்காவது அம்பு பாயட்டுமே. பாவம் அவர்களுக்கு நல்லது நடக்கட்டும். உடனே ஈஸ்வரிய குலத்தைச் சார்ந்தவரா அசுர குலத்தைச் சார்ந்தவரா என்பது தெரிந்து விடுகிறது. அன்பு வருகிறதா இல்லையா? இங்கே பலர் வருகிறார்கள். சரியாகி விடுகிறார்கள். பிறகு வெளியே சென்று கெட்ட சங்கத்தில் மற்றும் மாயாவின் சங்கத்தில் விகாரியாகி விடு கிறார்கள். நாங்கள் தோல்வி அடைந்து விட்டோம் என எழுதுகிறார்கள். ஆனால் ஒரு வேளை தெரிவிக்கவில்லை என்றால் வளர்ச்சி அடைந்து கொண்டே போகும். உங்களுக்கு இப்போது பாபாவுடன் அன்பான புத்தி இருக்கிறது. ஆம் உங்களிலும் கூட வரிசைக் கிரமத்தில் முயற்சிக்கு ஏற்ப அன்பான புத்தி இருக்கிறது. சிவபாபா குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். ஒரு போதும் எந்த விகர்மமும் செய்யக் கூடாது. ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். பாபா வினுடையவராகி விட்டீர்கள் என்றால், உங்களின் நடத்தையும் இப்படி இருக்க வேண்டும். பாபா விற்கு முழுமையாகத் தெரியும். பாபா முக்தி, ஜீவன் முக்தி, உலகத்தின் இராஜ்ய பதவியை கொடுக்கின்றார். மேலும் குழந்தைகளிடம் என்ன இருக்கிறது. அது பாபாவிற்குத் தெரியாது. பாபாவிடம் முழுமையாக கணக்கு கொடுக்க வேண்டும். எனக்கு கொடுப்பதால் உங்களுக்கு நஷ்டம் ஏற்படாது. அவர்களோ அனைத்து பணத்தையும் அவர்களின் காரியத்திற்காக எடுத்துக் கொள்கிறார்கள். நானோ நிராகாரமானவன். குழந்தைகளாகிய உங்களின் காரியத்தில் பயன் படுத்துகிறேன். காந்திஜி தேசத்தின் வேலைக்காகப் பயன்படுத்தினார். ஆகையால் அவருடைய பெயர் பிரசித்தமாகிறது. உண்மையில் காந்தி காங்கிரஸ் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்தார் இல்லை என்றால் இங்கே

இராஜாக்களின் இராஜ்யம் இருந்தது. இப்போது பாபா மீண்டும் புதிய இராஜ்யம் இராம இராஜ்யத்தை ஸ்தாபனை செய்துக் கொண்டிருக்கிறார். இந்த வி^யம் அனைத்து குழந்தைகளின் புத்தியிலும் பதிவதில்லை. ஒரு வேளை பதிந்து விட்டால் குஷியின் அளவு அதிகரிக்கும் பாபா வுடன் தொடர்பு கொண்டே இருக்க வேண்டும். பரந்தாமத்தில் இருக்கக் கூடிய தந்தையை எங்கே போக வேண்டுமோ அங்கே நினையுங்கள் என்று பாபா கூறுகிறார். இப்போது நாடகம் முடியப் போகிறது. நாடகத்தை யாரும் அறியவில்லை. யாருக்கும் என்னுடன் அன்பில்லை. நாங்கள் பரம்பரையாக கங்கையில் நீராடி வந்தோம் என்று கூறுகிறார்கள். சத்யுகத்தில் கூட நீராடினார்களா? பரம்பரை என்பதன் பொருளையும் அறிய வில்லை. இப்போது உங்களுக்கு சுகத்தின் நாட்கள் வந்துக் கொண்டிருக்கிறது என பாபா கூறுகின்றார். உங்களுடைய புத்தியில் பொறுமை இருக்கிறது. சிலரோ எதையும் புரிந்துக் கொள்ளவில்லை. இங்கே புரிந்துக் கொண்டு எப்போது வெளியே செல்கிறார்களோ மாயா அனைத்தையும் சாப்பிட்டுவிடுகிறது. எப்படி ஈ இறந்து போனால் எறும்புகள் அனைத்தும் அவற்றை முற்றுகை இட்டு எடுத்துச் செல்கிறது. இங்கே கூட இறந்து விட்டால் எறும்புகள் எடுத்து விழுங்கி விடுகிறது. மாயாவும் பலசாலியாக இருக்கிறது. மிகப் பெரிய போர் நடக்கிறது. இங்கே இருந்துக் கொண்டே வகுப்புக்கு வரவில்லை என்றால் அவர்கள் சொர்க்கத்திற்கு அதிபதியாக முடியாது என்று புரிய வைக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணபுரிக்குப் போக முடியாது. எந்த ஒரு மதிப்பும் இல்லை. உங்களில் யார் வைரம் போன்று மாறிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்குத் தான் மதிப்பு இருக்கிறது. நாம் மதிப்பு நிறைந்தவர்களாக மாறிக் கொண்டிருக் கிறோம் என நீங்கள் அறிகிறீர்கள். ஒரு வீட்டில் ஒரு அன்னம், ஒரு நாரை இருந்தால் சண்டை சச்சரவு நிச்சயம் நடக்கும். இங்கேயோ நாரையிலிருந்து விலகி இருக்கிறோம். அழுக்கு நிறைந்தவர்களின் கையினால் சமைத்ததை நீங்கள் சாப்பிட முடியாது. ஆனால் குழந்தை களுக்கு பாபாவின் மீது இவ்வளவு அன்பு இல்லை. ஆகையால் வயிறு எங்கிருந்து நிறையும் என யோசிக்கிறார்கள். அட, ஆதிவாசிகள் எங்கிருந்து சாப்பிடுகிறார்கள்? தற்காலத்தில் யாராவது காவியை அணிந்து கொண்டால் இலவசமாக பணம் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. அனைவரும் காலில் விழுந்துக் கொண்டே இருக்கிறார்கள். யார் வருகிறார்களோ சிலைக்கு முன்பாக பணத்தை வைத்துவிட்டு போகிறார்கள். மிகவும் சுலபம். குழந்தைகள் சிந்திக்க வேண்டும். இந்த உலகம் சீக்கிரமாக அழிந்து விட்டால் சொர்க்கத்திற்குப் போகலாம். ஆனால் தகுதியைக் அடைய வேண்டும் அல்லவா? பதவியும் பெற வேண்டும் அல்லவா? அங்கேயும் பதவியில் வித்தியாசம் இருக்கிறது. படிக்க வைக்கக் கூடியவர் ஒருவரே. சிலர் இராஜா இராணி யாக சிலர் வேலைக்காரர்களாக சிலர் பணக்கார பிரஜைகளாக மாறுகிறார்கள். இராஜ்யம் ஸ்தாபனையாகிக் கொண்டிருக்கிறது. மற்ற தர்ம ஸ்தாபனை யாளர்கள் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்வதில்லை. ஆகவே, எச்சரிக்கையாக இருங்கள் என பாபா கூறகிறார். வினாசக் காலத்தில் அன்பான புத்தியோடு இருங்கள். எவ்வளவு அன்பான புத்தி இருக்கிறதோ அவ்வளவு ஆஸ்தி கிடைக்கும். நினைப்பதற்குக் கூட கற்றுக் கொடுக்கப்படுகிறது. பாபாவையும் சக்கரத்தை யும் நினையுங்கள் என பாபா கூறுகிறார். சுய தரிசன சக்கரத்தைச் சுழற்றுங்கள். நாம் லைட்ஹவுஸ், படகோட்டி நம்முடைய படகை கரை சேர்க்கிறார். ஒரு கண்ணில் சாந்தி தாமம். ஒரு கண்ணில் சுக தாமத்தை வைக்க வேண்டும்.

நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஒவ்வொரு நடிகரின் நடிப்பைப் பார்த்து யாரையும் வெறுக்கக் கூடாது. எண்ணம், சொல், செயலில் துக்கம் கொடுக்கக் கூடாது.

2. பாபாவிற்கு தனது முழு கணக்கையும் ஒப்படைக்க வேண்டும். வினாசக் காலத்தில் முழுமையாக அன்பான புத்தி உடையவராக வேண்டும். ஸ்ரீமத் படி தனது நடத்தையை உயர்ந்ததாக மாற்றிக் கொள்ள வேண்டும். கெட்ட சங்கத்தில் இருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

வரதானம்: சூட்சுமமான பாவங்களிலிருந்து விடுபட்டு சம்பூரண ஸ்திதியை அடையக் கூடிய வெற்றி சொரூபம் ஆகுக.

தற்சமயம் சில குழந்தைகள் கர்மங்களின் நிலையைப் பற்றிய ஞானத்தில் மிகவும் கவனக் குறைவாக ஆகிவிட்டனர். எனவே, சிறு சிறு பாவங்கள் ஏற்பட ஆரம்பிக்கின்றன. கர்ம சித்தாந்தத்தின் தத்துவம் என்ன வெனில், ஒருவேளை, தாங்கள் பிறரை நிந்தனை செய்தாலோ அல்லது பிறருடைய தவறுகளைப் பரப்பினாலோ அல்லது மற்றவர்கள் கூறுவதற்கெல்லாம் ஆமாம், ஆமாம் என்று தலை ஆட்டினாலோ இது கூட பாவத்தின் பங்குதாரர் ஆகின்றீர்கள். நீங்கள் இன்று ஒருவரை நிந்தனை செய்தால் நாளை அவர்கள் உங்களை இரண்டு மடங்கு நிந்தனை செய்வார்கள். இந்த மாதிரியான சின்னச் சின்ன பாவங்கள் சம்பூரண ஸ்திதியை அடைவதற்கு விக்னங்களாக ஆகிவிடும். எனவே, கர்மங்களின் நிலையை அறிந்து கொண்டு பாவங்களிலிருந்து விடுபட்டு வெற்றி சொரூபம் ஆகுங்கள்.

சுலோகன்: ஆதி பிதாவிற்கு சமமாக ஆகுவதற்காக சக்தி, சாந்தி மற்றும் சர்வ குணங்களின் ஸ்தம்பம் (தூண்) ஆகுங்கள்.

மாதேஸ்வரி அவர்களின் விலைமதிப்பான மகாவாக்கியம்

நிராகாரமான உலகம் எனில் ஆத்மாக்கள் வசிக்கின்ற இடம்

நாம் நிராகாரி உலகம் என்று கூறுகின்றோம் எனில் அதற்கு எந்தவொரு ஆகாரமும் (வடிவம்) இல்லை என்று அர்த்தம் கிடையாது. ஆனால், அப்படி ஒரு உலகம் அவசியம் இருக்கிறது எனினும் அதற்கு இந்த ஸ்தூல உலகத்தைப் போன்று ஒரு வடிவம் கிடையாது. எவ்வாறு பரமாத்மா நிராகாரமாக இருக்கின்றார், ஆனாலும், அவருக்கென்று சூட்சும வடிவம் அவசியம் இருக்கிறதல்லவா. ஆத்மாக்களாகிய நாமும் பரமாத்மாவும் இருக்கின்ற தாமம் (இடம்) நிராகாரி உலகம் ஆகும். உலகம் என்ற வார்த்தையை நாம் சொல்லும் போதே அதுவும் ஓர் உலகம் தான் என்றும் அங்கும் யாரோ இருக்கின்றனர் என்றும் எனவே தான் உலகம் என்று பெயர் வந்துள்ளது என்பது நிரூபணம்

ஆகிறது. பரமாத்மாவின் ரூபம் அகண்ட ஜோதி தத்துவம் என்று உலக மக்கள் புரிந்துக்கொண்டு இருக்கின்றனர். ஆனால், அந்த உலகமானது பரமாத்மாவின் வசிப்பிடம் ஆகும். அதனை ரிடையர்டு ஹோம் (ஓய்விற்கான வீடு) என்று சொல்கின்றோம். நாம் ஒருபொழுதும் பரமாத்மாவின் வீட்டை பரமாத்மா என்று சொல்ல முடியாது. இரண்டாவதாக உள்ளது ஆகாரி உலகம். அங்கு பிரம்மா, விஷ்ணு, சங்கரர் ஆகிய தேவதைகள் ஆகாரி ரூபத்தில் (வடிவத்தில்) உள்ளனர். மேலும் இதுவோ சாகார உலகம். இதற்கும் இரண்டு பாகங்கள் உண்டு. ஒன்று விகாரமற்ற (நிர்விகாரி) சொர்க்கம் போன்ற உலகம். அங்கு அரைக்கல்பம் சதா தூய்மை, சுகம், சாந்தி இருக்கும். இரண்டாவது விகாரம் நிறைந்த கலியுகம். அது துக்கம், அசாந்தி நிறைந்த உலகமாகும். இப்பொழுது இரண்டு உலகங்கள் என்று ஏன் கூறப்படுகிறது? ஏனெனில், சொர்க்கம், நரகம் என்ற இரண்டும் பரமாத்மா வால் படைக்கப்பட்ட உலகம் என்று உலக மக்கள் கூறுகின்றனர் அல்லவா! இதைப் பற்றிய பரமாத்மாவின் மகாவாக்கியம் என்னவெனில், குழந்தைகளே! நான் துக்கம் நிறைந்த எந்த உலகத்தையும் படைக்கவில்லை. நான் படைத்தது சுகம் நிறைந்த உலகத்தைத் தான். இப்பொழுது இந்த மனித ஆத்மாக்கள் தம்மையும், பரமாத்மாவாகிய என்னையும் மறந்த காரணத்தினால் இந்த துக்கம், அசாந்தி நிறைந்த உலகத்தில் தங்களுடைய கணக்கு வழக்கு களை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர். மற்றபடி, எப்போது உலகில் சுகம் மற்றும் புண்ணியம் நிறைந்து இருந்ததோ, அப்போது சிருஷ்டியே நடைபெறவில்லை என்று கூற முடியாது. அது தேவதைகளின் இருப்பிடமாக இருந்தது,. அங்கும் அவசியம் இல்லறம் நடை பெற்றது, ஆனால், விகாரம் மூலம் படைத்தல் (பிறப்பு) ஏற்படவில்லை. எனவே, எந்தவொரு கர்மபந்தனமும் அங்கு இல்லை. அந்த உலகத்தைத் தான் கர்மபந்தனமில்லாத சொர்க்கலோகம் என்று சொல்கின்றோம். எனவே, 1. நிராகாரி உலகம், 2. ஆகாரி உலகம், 3. சாகாரி உலகம் என மூன்று உலகங்கள் உள்ளன.

அனாதியில் உருவாக்கப்பட்ட பகவான் வருகைக்கான புரோகிராம்

ஹே! கீதையின் பகவானே! தாங்கள் கூறிய வார்த்தையை மெய்ப்பிக்க வாருங்கள் என்று மனிதர்கள் புகழ் பாடுகின்றனர். இப்பொழுது சுயம் கீதையின் பகவான் கல்பத்திற்கு முன்பு தாம் கூறியதை மெய்ப்பிக்கும் பொருட்டு வந்துள்ளார். ஹே! குழந்தைகளே! எப்பொழுது இந்த பாரத பூமியில் தர்ம நிந்தனையானது தலைவிரித்து ஆடுகின்றதோ, அப்பொழுது நான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக அவசியம் வருகின்றேன் என்று கூறுகின்றார். இதனால் நான் யுகம் யுகம் வருகின்றேன் என்று அர்த்தமல்ல என்று கூறுகின்றார். அனைத்து யுகங் களிலும் தர்ம நிந்தனை ஏற்படுவதில்லை. தர்ம நிந்தனை ஏற்படுவதே இந்தக் கலியுகத் தில் தான். எனவே, பரமாத்மா இந்தக் கலியுகத்தில் தான் வருகின்றார் என்பதை புரிந்து கொள்ளுங் கள். கலியுகம் என்பது கல்ப கல்பம் வருகின்றது. எனவே, அவசியம் கல்ப கல்பம் அவர் வருகின்றார். ஒரு கல்பம் எனில் அதில் நான்கு யுகங்கள் உள்ளன. அதனைத் தான் ஒரு கல்பம் என்கிறோம். அரைக் கல்பம் அதாவது சத்யுகம், திரேதாயுகத்தில் நாம் சதோ குணமாக, சதோபிரதானமாக இருக்கின்றோம். எனவே, அங்கு பரமாத்மா வரவேண்டிய அவசியமே இல்லை. பின்னர், துவாபரயுகத்தில் இருந்து பிற மதத்தினரின் வருகை ஏற்படு கிறது. அப்பொழுதும் கூட தர்ம நிந்தனை என்பது கிடையாது. எனவே, இந்த மூன்று யுகங் களிலும் பரமாத்மா வருவதே கிடையாது என்பது நிரூபணம்

ஆகிவிடுகிறது. மற்றபடி மிஞ்சியிருப்பது கலியுகம் தான். கலியுகத்தின் இறுதியில் தான் தர்ம நிந்தனை அதிகமாக ஆகின்றது. அந்த சமயத்தில் தான் பரமாத்மா பூமிக்கு வந்து அதர்மத்தை அழித்து சத்தியமான தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றார். ஒருவேளை, துவாபரயுகத்தில் பரமாத்மா வந்திருந்தால் துவாபர யுகத்திற்குப் பின்னர் சத்யுகம் தான் வந்திருக்க வேண்டும். பின்னர் எப்படி கலியுகம் வந்தது? எனவே, இப்பொழுது இருள் சூழ்ந்த கலியுகத்தை பரமாத்மா ஸ்தாபனை செய்தார் என்று கூறமுடியாது. இது தவறாகும். எனவே, நான் ஒருவர் தான் மேலும் ஒரே ஒருமுறை தான் வந்து அதர்மத்தை வினாசம் செய்து அதாவது கலியுகத்தை வினாசம் செய்து சத்யுகத்தை ஸ்தாபனை செய்கின்றேன். எனவே, என்னுடைய வருகைக்கான சமயம் சங்கமயுகம் ஆகும் என்று பரமாத்மா கூறுகின்றார். நல்லது. ஓம்சாந்தி.